# தொடக்கப்பள்ளி ஆசிரியர்களிடம் மாணவர்களின் எழுதுதல் திறனை வளர்ப்பதற்கான உத்திகளைப் பயிற்சித் தாள்கள் வாயிலாக மேம்படுத்துதல்.


**ஆய்வாளர்**
**இரா. மணிமாலா எம்.ஏ.,எம்.எட்., எம்.பில்.,**
**விரிவுரையாளர்,**
**மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,**
**தருமபுரி**


**ஒப்படைப்பு**
**இயக்குநர்**
**மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,**
**சென்னை – 6.**
**2024 - 2025**


இரா. மணிமாலா எம்.ஏ.,எம்.எட்., எம்.பில்.,
விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
தருமபுரி.


.

## உறுதிமொழி

**தொடக்கப்பள்ளி ஆசிரியர்களிடம் மாணவர்களின் எழுதுதல் திறனை வளர்ப்பதற்கான உத்திகளைப் பயிற்சித் தாள்கள் வாயிலாக மேம்படுத்துதல்** என்னும் இச்செயலாய்வு என்னால் மேற்கொள்ளப்பட்டது எனவும், இச்செயல் ஆய்வை

வேறு எந்த வடிவிலும் வேறெங்கும் இதற்கு முன்னர் அளிக்கவில்லை எனவும் இதன் மூலம் உறுதி அளிக்கிறேன்.

இடம் : தருமபுரி, இப்படிக்கு

நாள் : 24.03.2025 ( இரா. மணிமாலா )

**சான்றிதழ்**

முனைவர். பெ. கோவிந்த பிரகாஷ்,
முதல்வர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
செட்டிக்கரை,
தருமபுரி– 636 704

**தொடக்கப்பள்ளி ஆசிரியர்களிடம் மாணவர்களின் எழுதுதல் திறனை வளர்ப்பதற்கான உத்திகளைப் பயிற்சித் தாள்கள் வாயிலாக மேம்படுத்துதல்** என்னும் இந்தச் செயல் ஆராய்ச்சி எனது வழிகாட்டுதல் மற்றும் மேற்பார்வையின் கீழ் திருமதி.இரா. மணிமாலா, விரிவுரையாளர் மேற்கொண்ட அசல் செயல் ஆராய்ச்சிப் பணி என்று சான்றளிக்கிறேன்.

இடம் : தருமபுரி முதல்வர்

நாள் : 20.05.2025

## நன்றியுரை

செயலாய்வுக்கு அனுமதியும் பொருளுதவியும் வழங்கிய மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநர் அவர்களுக்கும், இணை இயக்குநர் பெருமக்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

செயலாய்வுக்கு அங்கீகாரமளித்து வேண்டிய திருத்தங்கள் கூறி வழிகாட்டிய சேலம், நாமக்கல், தருமபுரி மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள், மண்டல குழு மற்றும் முதுநிலை விரிவுரையாளர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

செயலாய்வை இனிதே முடிக்க ஒல்லும் வகையான் உதவிய தருமபுரி மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர் அவர்களுக்கும் எனது நன்றியை உரித்தாக்குகிறேன்.

ஆய்வுக்கு உறுதுணை நின்ற பாப்பிரெட்டிப்பட்டி வட்டாரக் கல்வி அலுவலர்கள், தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றி.

இரா. மணிமாலா,

விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
தருமபுரி.

| வ.எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1 | அறிமுகம் | 6 |
| 2 | பிரச்சனையைக் கண்டறிதல் | 7 |
| 3 | ஆய்வின் தேவை | 7 |
| 4 | ஆய்வு தலைப்பு | 7 |
| 5 | ஆய்வு நோக்கங்கள் | 7 |
| 6 | ஆய்வுக்கான உத்தேச காரணிகள் | 7 |
| 7 | செயல் கருதுகோள்கள் | 8 |
| 8 | ஆய்வுமுறை | 8 |
| 8.1 | ஆய்வு மாதிரிகள் | 9 |
| 8.2 | ஆய்வு வடிவமைப்பு | 9 |
| 8.3 | ஆய்வுக் கருவிகளின் விரிவாக்கம் | 9 |
| 8.4 | ஆய்வு செயல்முறை விளக்கம் | 9 |
| 8.5 | தரவுகளைச் சேகரித்தல் | 10 |
| 8.6 | இடைவினைச் செயல்பாடுகள் | 27 |
| 8.7 | தரவுகளைப் பகுப்பாய்வு | 27 |
| 9 | பகுப்பாய்வு மற்றும் விளக்கம் | 28 |
| 10 | செயல் ஆய்வில் கண்டறிந்தவை | 29 |
| 11 | செயலாய்வின் நன்மை | 29 |
| 12 | செயலாய்வு முடிவடைதல் | 29 |
| 13 | பரிந்துரை மற்றும் கல்விச் செயல்பாடுகள் | 30 |
| 14 | ஆய்வு முடிவுகள் | 30 |

**தொடக்கப்பள்ளி ஆசிரியர்களிடம் மாணவர்களின் எழுதுதல் திறனை வளர்ப்பதற்கான உத்திகளைப் பயிற்சித் தாள்கள் வாயிலாக மேம்படுத்துதல்.**

## 1. அறிமுகம்

Commented [A1]:

நமது நாட்டின் முன்னேற்ற இலக்குகள் அடையப் பெறுவதற்கு இன்றியமையாத சமூக, பொருளாதார பண்பாட்டு மாற்றங்களைத் தோற்றுவிக்கும் வலுமிக்க கருவியாக கல்வி விளங்க வேண்டும்.

- கோத்தாரி கல்விக்குழு

புலன் காட்சித் திறன், நினைவாற்றல், கற்பனைத் திறன், பொதுமைக் கருத்துகளை உருவாக்கும் திறன், ஆய்வுத்திறன் போன்ற மனத்திறன்களும் மொழித் திறனும் (அடிப்படைத் திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ) அறிவு வளர்ச்சிக்கு உதவுகின்றன. கல்வி, அறிவுத் தேடலுக்கான பயணம் மட்டுமல்ல. அது எதிர்கால வாழ்வுக்கு அடித்தளம் அமைத்திடும் கனவின் தொடக்கமும்கூட. மொழியைக் கற்றலின் முதன்மை நோக்கம் அம்மொழியைப் பயன்படுத்த, அடிப்படைத் திறன்களைப் பெற்றிருத்தல் வேண்டும். இவை வாழ்க்கையில் முழுமையாகப் பயன்படுவனவாகும். இத்திறன்கள், பெரும்பாலும் பல்வேறு நிலைகளில் கருத்துப் பரிமாற்றங்களுக்கே பெரிதும் உறுதுணையாவன. ஒரு மொழியோடு ஒன்றி வாழ்வதற்கும் ஒருவர் தாம் பெற்ற மொழிப் பயனைப் பிறரும் பெறவைப்பதற்கும் மொழியில் உயர்நிலைத் திறன்கள் உதவுகின்றன.

உயர்நிலைத் திறன்களில் முதல் நிலையாகப் படித்தல் அமைகிறது. படித்தலும் எழுதுதலும் ஒன்றை ஒன்று சார்ந்திருப்பதனால் படித்தலின் தன்மைகள் எழுதுதலின் தன்மைகளோடு தொடர்புடையதாகிறது.

‘படிப்பு ஒருவனை முழு மனிதனாக்குகிறது; பேச்சு அவனை விழிப்புள்ளவனாக்குகிறது; எழுதுதல் ஒருவனைச் செம்மையானவனாக்குகிறது’ என்னும் ஆங்கில உரைநடையாசிரியர் பேகனின் கூற்று எழுத்துத் திறனின் சிறப்பைக் குறிக்கிறது.

## 2. ஆய்வுக்கான பின்புலம்

தமிழ் மொழியில் அடிப்படைத்திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகியவற்றுள் நான்காவது திறனாகிய எழுதுதல் திறன் மாணவர்களின் கற்றலின் விளைவை வெளிப்படுத்துவதாய் அமைகிறது. பாப்பிரெட்டிப்பட்டி ஒன்றியத்தில் பள்ளிப் பார்வையின்போது மூன்றாம் வகுப்பு மாணவர்கள் பயிற்சி ஏடுகளில் உள்ள சொற்களைப் படிக்கின்றனர், சொல்லுகின்றனர், எழுதுகின்றனர். ஆனால் அவற்றோடு தொடர்புடைய பிற சொற்களையோ, சொற்களில் உள்ள எழுத்துகளைக் கொண்டு புதிய சொற்களை உருவாக்கும் முயற்சிகளைச் செய்வதில்லை. அறிந்த சொற்களைக்கூட எழுதுவதற்குத் தயங்குகின்றனர். இக்காரணங்களால் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

## 4. பிரச்சனையைக் கண்டறிதல்

பள்ளிப் பார்வையின்போது மாணவர்கள் தங்கள் பயிற்சி ஏடுகளில் கொடுக்கப்பட்டுள்ள செயல்பாடுகளை மட்டும் செய்கின்றனர். அச்சொற்களைத் தனியாக எழுதவும் செய்கின்றனர். ஆனால் அவற்றிலிருக்கும் எழுத்துகளைப் பயன்படுத்தி புதிய சொற்களை எழுதுவதிலும், சொற்களுக்குத் தொடர்புடைய சொற்களைச் சிந்தித்து எழுதவும் முயற்சிக்கவில்லை. நினைப்பதை சிந்தித்துத் தொடராக எழுதவும் முயற்சிக்கத் தயங்குகின்றனர்.

**5. ஆய்வின் தேவை மற்றும் முக்கியத்துவம்**

அடிப்படைத் திறன்களுள் மூன்று திறன்களைப் பெற்றுள்ள மாணவர்கள் நான்காவது திறனாக இருக்கும் எழுதுதல் திறனை வளர்த்துக்கொள்ள வேண்டியது அவசியம். தொடக்கப் பள்ளி மாணவர்கள் தாங்கள் கேட்டு, பேசி, படித்த சொற்களை எழுவதிலும் புதிய சொற்களை அதாவது மாணவர்கள் ஏற்கனவே அறிந்த சொற்களை எழுதுவதிலும் முழு ஆர்வத்துடன் இல்லை. ஒரு சொல்லிற்குத் தொடர்புடைய சொற்களை அவர்கள் ஏற்கனவே அறிந்த சொற்களை எழுதவும் தயங்குகின்றனர். ஆகவே மாணவர்கள் சிந்தித்து தாங்களாகவே புதிய சொற்களை உருவாக்கவும் தொடர்புடைய சொற்களை எழுதவும் கருத்துகளை எழுத்துவடிவில் வெளிப்படுத்த வேண்டுமென்ற நோக்கில் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்தால் அது இலகுவாக அனைத்து மாணவர்களையும் சென்றடைய இவ்வாய்வானது தேவையானதாகும்.

**6. ஆய்வு நோக்கங்கள்**

- ஆசிரியர்கள் கொடுக்கப்பட்ட சொற்களில் உள்ள எழுத்துகளைப் பயன்படுத்தி மாணவர்களைச் சிந்தித்துப் புதிய சொற்களை உருவாக்க ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்தல்.
- ஆசிரியர்கள் கொடுக்கப்பட்ட சொற்களுக்குத் தொடர்புடைய சொற்களைச் சிந்தித்து எழுதும் திறனை மாணவர்களிடம் வளர்க்க பயிற்சித்தாள்கள் பயன்படுத்துதல்.
- மாணவர்கள் கற்றறிந்த, நடைமுறைப் பயன்பாட்டில் பயன்படுத்தும் சொற்களை, தொடர்களை எழுத ஆசிரியர்களுக்கு வழிகாட்டுதல்.
- 

**7. ஆய்வுக்கான உத்தேச காரணிகள்**

மாணவர்கள் எழுதுதல் திறனில் பயிற்சி பெற வேண்டும்.
கண்களால் காணும் காட்சிகளுக்கு எழுத்துரு கொடுக்க வேண்டும்
சொந்த நடையில் தனது கருத்துகளை வெளிப்படுத்த முயற்சிசெய்ய வேண்டும்.
சிந்திந்து எழுதும் திறன்பெறுதல் வேண்டும்.

## 8. செயல் கருதுகோள்கள்

ஆசிரியர்கள் பயிற்சித் தாள்களைப் பயன்படுத்துவதால் மாணவர்கள் கொடுக்கப்பட்ட சொற்களில் உள்ள எழுத்துகளைப் பயன்படுத்தி புதிய சொற்களை உருவாக்குவர்.

ஆசிரியர்கள் பயிற்சித்தாள்களின் வாயிலாக மாணவர்களின் ஆர்வத்தைத் துாண்டுவதால் சொற்களுக்குத் தொடர்புடைய சொற்களைச் சிந்தித்துக் கூறும் திறன் பெறுவர்.

ஆசிரியர்கள் வழிகாட்டுதல்களினால் மாணவர்கள் பயிற்சித்தாள்களில் அறிந்த சொற்களஞ்சியத்தைப் பயன்படுத்தி சொந்தமாக எழுத முயற்சி செய்வர்.

## 9. ஆய்வு முறை

பரிசோதனை முறை

### 9.1 ஆய்வு மாதிரிகள்

தொடக்கப் பள்ளி 20 ஆசிரியர்கள், பாப்பிரெட்டிப்பட்டி ஒன்றியம்

### 9.2 ஆய்வு வடிவமைப்பு

ஒன்றைச் சோதனைக் குழு

### 9.3 ஆய்வுக் கருவிகள்

முன்தேர்வு, பின்தேர்வு வினாத்தாள்

### ஆய்வுக் கருவிகளின் விளக்கம்

தொடக்கப் பள்ளியில் பணிபுரியும் 20 ஆசிரியர்களுக்கு மாணவர்களின் எழுதுதல் திறனை மேம்படுத்துவதற்கான பயிற்சித் தாள்கள் சார்ந்த பத்து வினாக்கள் உருவாக்கப்பட்டது. அவ்வினாக்கள் மாணவர்களின் எழுதுதல் திறனுக்கான உத்திகளைக் கொண்டதாக உருவாக்கப்பட்டது. முன்தேர்வு, பின்தேர்வு வினாத்தாளில் மூன்று வினாக்கள் ஆசிரியர்கள் எழுதுதல் பற்றிய அறிதலுக்கும், ஆறு வினாக்கள் மாணவர்களின் வாய், ஒரு வினா ஆசிரியர்கள்உயர்நிலைத் திறன்களின் அடிப்படையில் வினாக்கள் உருவாக்கும் திறனை வெளிக்கொணரும் முறையிலும் உருவாக்கப்பட்டது.

### 9.4 ஆய்வு செயல்முறை விளக்கம்:

**தொ**டக்கப் பள்ளி ஆசிரியர்கள் மாணவர்களின் எழுதுதல் திறனை வளர்க்கும் உத்திகளைத் திட்டமிட்டு, பயிற்சித்தாள்கள் உள்ளடங்கிய பயிற்சிக் கட்டகம் உருவாக்கப்பட்டு ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. எளிமையிலிருந்து கடினம் என்ற கோட்பாட்டிற்கிணங்க முதல் பயிற்சித் தாளில் சொற்களில் தொடங்கி இறுதி பயிற்சித் தாளில் சொந்தமாக

எழுதவும் வினாக்களை உருவாக்கவும் பயிற்சி அளிக்கப்பட்டது. முதலில் ஆசிரியர்கள் வகுப்பறையில் என்னென்ன உத்திகளை மாணவர்களின் எழுதுதல் திறனுக்காகப் பயன்படுத்துகின்றனர் என்பதையும் மாணவர்களுக்கு அளிக்கப்படவுள்ள பயிற்சித்தாள்களில் ஒரு சில உத்திகளையும் முன்தேர்வு வினாத்தாள்களில் இடம்பெறும் வகையில் தேர்வு நடத்தப்பட்டது. பின்னர் பயிற்சிக் கட்டகம் வழங்கி ஆசிரியர்களுக்கு ஒரு நாள் பயிற்சி வழங்கப்பட்டது. பயிற்சிக்குப்பின் அவ்வுத்திகளை வகுப்பறையில் மாணவர்களுக்குப் பயிற்சித்தாள்கள் வழங்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டது. பள்ளிப்பார்வையின் போது மாணவர்கள் பயிற்சித்தாள்களைப் பயன்படுத்தி எழுதுவதைக் காண முடிந்தது. மாணவர்கள் அதிக ஈடுபாட்டுடன் எழுதினர். ஒரு சில மாணவர்கள் எழுத்துப் பிழைகளுடன் எழுதியதையும் காண முடிந்தது. பின்னர் முன்தேர்வு வினாத்தாளைக்கொண்டு பின்தேர்வு வைக்கப்பட்டது. ஆசிரியர்கள் எழுதுதல் திறன்தொடர்பான வினாக்களுக்கு முழுமையாக விடையளித்தனர். இது மாணவர்களுக்கு வகுப்பில் அளிக்கப்பட்ட பயிற்சியின் வெளிப்பாடாக இருக்கிறது.

**9.5 தரவுகளைச் சேகரித்தல்:**

முன்தேர்வு வினாத்தாள்களைக்கொண்டு 20 தொடக்கப்பள்ளி ஆசிரியர்களிடம் அவர்கள் அளித்த விடைகளின் மதிப்பெண்கள் தரவுகளாகச் சேகரிக்கப்பட்டது.

**மதிப்பெண் பட்டியல்**

| **வ. எண்** | **ஆசிரியர்களின் பெயர் மற்றும் முகவரி** | **முன் தேர்வு** | **பின் தேர்வு** |
|---|---|---|---|
| 1 | வெ. வெங்கடாசலம், தலைமையாசிரியர் , ஊ.ஒ.தொ. பள்ளி , பையர்நத்தம் | 30 | 70 |
| 2 | ம. சாந்தி, SGT, ஊ.ஒ.தொ. பள்ளி , பையர்நத்தம் | 25 | 50 |
| 3 | அ. அம்புஜம், SGT, ஊ.ஒ.தொ. பள்ளி , பையர்நத்தம் | 45 | 76 |
| 4 | தீ.வளர்மதி, SGT, ஊ.ஒ.தொ. பள்ளி , பையர்நத்தம் | 20 | 73 |
| 5 | வே. வனிதாமணி, SGT, ஊ.ஒ.தொ. பள்ளி , பையர்நத்தம். | 40 | 78 |
| 6 | செ. செல்வஜோதி, SGT, ஊ.ஒ.தொ. பள்ளி, பில்பருத்தி | 30 | 65 |
| 7 | பெ. கலைச்செல்வி, தலைமையாசிரியர், ஊ.ஒ.தொ. பள்ளி, நடூர். | 30 | 52 |
| 8 | ம. அம்சராணி, SGT ஊ.ஒ.தொ. பள்ளி, நடூர். | 20 | 56 |
| 9 | ச.ஜோதி, SGT, ஊ.ஒ.தொ. பள்ளி, பொ. | 30 | 68 |

| | | | |
|---|---|---|---|
| | துறிஞ்சிப்பட்டி | | |
| 10 | மா. இந்திராகாந்தி , தலைமையாசிரியர், ஊ.ஒ.தொ. பள்ளி, பொ. துறிஞ்சிப்பட்டி. | 35 | 72 |
| 11 | ந. கலா, SGT, ஊ.ஒ.தொ. பள்ளி, பொ. துறிஞ்சிப்பட்டி . | 30 | 58 |
| 12 | இ. சுரேஷ்வாணன், SGT ஊ.ஒ.தொ. பள்ளி, பொ. துறிஞ்சிப்பட்டி | 40 | 76 |
| 13 | வெ. செல்வராஜ், SGT, ஊ.ஒ.தொ. பள்ளி, பொ. துறிஞ்சிப்பட்டி . | 40 | 78 |
| 14 | சி. வளர்மதி, தலைமையாசிரியர், ஊ.ஒ.தொ. பள்ளி, பொ. மல்லாபுரம். | 50 | 78 |
| 15 | அ. வளர்மதி, SGT ஊ.ஒ.தொ. பள்ளி, பொ. மல்லாபுரம். | 40 | 66 |
| 16 | பி. சுகுணா, ஊ.ஒ.தொ. பள்ளி, பொ. மல்லாபுரம். | 30 | 70 |
| 17 | சீ. இளங்கனி, SGT ஊ.ஒ.தொ. பள்ளி, பொ. மல்லாபுரம். | 30 | 60 |
| **வ. எண்** | **ஆசிரியர்களின் பெயர் மற்றும் முகவரி** | **முன் தேர்வு** | **பின் தேர்வு** |
| 18 | வி.எஸ். சித்ரா, SGT, ஊ.ஒ.தொ. பள்ளி, பொ. மல்லாபுரம். | 30 | 64 |
| 19 | ஆர்.அசீனாபானு, SGT, ஊ.ஒ.தொ. பள்ளி, பொ. மல்லாபுரம். | 30 | 58 |
| 20 | சி. மங்கம்மாள், SGT, ஊ.ஒ.தொ. பள்ளி, பொ. மல்லாபுரம். | 30 | 68 |
| | **மொத்தம்** | 655 | 1336 |
| | **சதவிகிதம்** | **32.75%** | **66.8%** |

**இடைவினைச் செயல்பாடுகள்**

ஆசிரியர்களுக்கு முன்தேர்வு வினாத்தாளைக்கொண்டு தேர்வு நடத்தப்பட்டது. அதன்தொடர்ச்சியாக ஒருநாள் பயிற்சி அளிக்கப்பட்டது. அப்பயிற்சிக்கான இடைவினைச் செயல்பாடுகள் உருவாக்கப்பட்டு பயிற்சி வழங்கப்பட்டது. அவர்கள் எழுதுதல் திறனுக்கான உத்திகளை வகுப்பறையில் செயல்படுத்தினர். இடைவினைச் செயல்பாடுகள் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களிடம் மாணவர்களின் எழுதுதல் திறனை வளர்ப்பதற்கான உத்திகள் பலவாக உள்ளன. இதில் முக்கியமான ஒன்று **பயிற்சித் தாள்களைப்** பயன்படுத்துவது ஆகும். இந்தப் பயிற்சிகள் மாணவர்களுக்கு எழுதுதல் திறனைக் கற்றுக்கொடுக்க மிகவும் உதவியாக இருக்கும். மாணவர்களிடம் வருக்க எழுத்துகளை வரிசையாக எழுதக் கற்றுக் கொடுத்த பின்னர் அவர்கள் வரி வடிவத்தையும் அவ்வெழுத்துகளால் தொடங்கும் சொற்களையும் எழுதப் பழகியதால் புதிய

தொடர்களையும் எழுத முடிகிறது என்பதை ஆசிரியர்களால் அறியப்பட்டது. மாணவர்கள் புதிய சொற்களை உருவாக்குவதிலும் அவற்றைக்கொண்டு தொடர் அமைப்பதிலும் ஆர்வம் காட்டுவதையும் பயிற்சித்தாள்களில் ஒவ்வொரு செயல்பாடுகளாகச் செய்ய வைப்பதால் அவற்றைக் கையாள்வதில் விருப்பமுடன் செயல்படுவதையும் தொடர் நடவடிக்கையாகப் பள்ளிப் பார்வையின் வாயிலாக அறியப்பட்டது.

**மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,**
**செட்டிக்கரை – 636 704**
**தருமபுரி மாவட்டம்.**
**செயலாய்வு பயிற்சிக் கட்டகம்**

**ஆய்வாளர்**
**இரா. மணிமாலா,**
**விரிவுரையாளர்,**
**மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,**
**செட்டிக்கரை, தருமபுரி.**

**ஆசிரியர்களுக்கு**

செயல்பாட்டை நடத்துவதற்கு முன்பு ஓரிருமுறை மனத்துக்குள் திட்டமிட்டுக்கொள்வது நல்லது.

உங்கள் வகுப்புக்குத் தகுந்தாற்போல் எப்படி துவங்குவது என்பதை முடிவு செய்யலாம்.

நான் தந்திருப்பது சில யோசனைகள் மட்டுமே..

செயல்பாட்டில் ஈடுபடும் குழந்தைகளைக் கவனியுங்கள். அவர்கள் ரசித்துச் செய்கிறார்களா என்பதைக் கவனியுங்கள்.

ஓய்வு நேரங்களில் இச்செயல்பாடுகள் பற்றிப் பேசுகிறார்களா?

வீட்டில் உள்ளவர்களுக்கோ மற்றவர்களுக்கோ சொல்லிக் கொடுக்கிறார்களா?

பக்கத்து வகுப்பு மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கிறார்களா?

நாம் எதிர்பார்க்காத நேரத்தில் குறிப்பேட்டுடன் வந்து தாங்கள் உருவாக்கிய படைப்பைக் காட்டுகிறார்களா?

குழந்தைகள் தங்களுக்குள் குறிப்பேடுகளை வாசிப்பதும் திருத்துவதும் மேம்படுத்துவதும் நடக்கிறதா?

அனைவரும் ஈடுபடுகிறார்களா?

பாடவேளை முடிந்துவிட்டதே என்று வியக்கிறார்களா?

இவை போன்ற பல விளைவுகளுள் எத்தனை நம் வகுப்பில் நடக்கின்றன நடக்கலாம். அவற்றையும் கவனிக்கத் தவறாதீர்கள்.

மொழித்திறன்கள் மொழியைத் தெளிவாகவும் திறமையாகவும் கையாள வாய்ப்பளிக்கின்றன. கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் என்னும் நான்கும் மொழியின் மொழியின் அடிப்படைத் திறன்களாகும். இவற்றுள் பேசுதலும் கேட்டலும் ஒலியை அடிப்படையாகக் கொண்டவை. படித்தலும் எழுதுதலும் வரிவடிவத்தை அடிப்படையாகக் கொண்டவை. மொழியின்ி அடிப்படைத் திறன்களை அவை பெறப்படுகின்ற நிலையில் கொள்திறன், வெளியிடுதிறன் என இரு வகைப்படுத்தலாம்.

**எழுதுதல் திறன்** என்பது ஒருவரின் எண்ணங்களை, உணர்வுகளை, கருத்துக்களை தெளிவாக மற்றும் கலைபூர்வமாக எழுதுவது. இது பொதுவாக வரி அமைப்புகள், சொற்கள், மற்றும் வாக்கியங்கள் கொண்ட, குறிப்பிட்ட நோக்கத்துடன் எழுதும் திறனாக வரையறுக்கப்படுகிறது. எழுதுதல் என்பது ஒரு ஊக்கமான மற்றும் வளர்ச்சியடையக் கூடிய திறன், மற்றும் இது பயிற்சி வாயிலாக மேம்படுத்தலாம். எழுத்துத் திறன் என்பது எழுதுதல் திறனின் மேம்பட்ட நிலையாகும்.

தொடக்கப்பள்ளி ஆசிரியர்களிடம் மாணவர்களின் எழுதுதல் திறனை வளர்ப்பதற்கான உத்திகள் பலவாக உள்ளன. இதில் முக்கியமான ஒன்று **பயிற்சித் தாள்களைப்** பயன்படுத்துவது ஆகும். இந்தப் பயிற்சிகள் மாணவர்களுக்கு எழுதுதல் திறனைக் கற்றுக்கொடுக்க மிகவும் உதவியாக இருக்கும். சில உத்திகள்:

**தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கான எழுத்துத் திறன் மேம்பாட்டு உத்திகள்:**

1. **படங்களைப் பயன்படுத்துதல்**:
   - **படங்களைக் காட்டி கதை எழுத வைக்கவும்**: குழந்தைகள் படங்களை பார்த்து, அந்தப் படங்களைக் கொண்டு கதைகளை எழுதும்படி கேட்டுக் கொள்ளுங்கள். இது அவர்களது கற்பனை மற்றும் எழுத்துத் திறனை மேம்படுத்தும்.
   - **உதாரணம்**: "இந்தப் படத்தில் இருக்கும் பூனைப் பற்றிய ஒரு கதை எழுதுங்கள்."

2. **எழுத்துக் குறிப்பு அல்லது குறிப்பு எழுதுதல்**:
    - **மாணவர்களுக்கு பத்திரிகைச் சம்பவங்களைப் பற்றி எழுத வைக்கவும்**. அவர்கள் வீட்டில் நிகழ்ந்த விஷயங்கள் அல்லது பள்ளியில் நடந்த நிகழ்வுகள் பற்றிய குறிப்புகளை எழுதச் சொல்லுங்கள்.
    - **உதாரணம்**: "நேற்று நடந்த விளையாட்டுப் போட்டிகள் பற்றிய குறிப்பு எழுதுங்கள்."
3. **வகைப்படுத்தல் மற்றும் கட்டமைப்பு**:
    - **வகைகளில் எழுதுவதற்கு பயிற்சி**: குழந்தைகளுக்கு எழுதும் முறைப்படிகளை, தொகுப்புகளை, கட்டமைப்புகளை புரிந்துகொள்ள உதவி செய்யுங்கள். குறைந்தது ஒரு தொடக்கம், நடுவாக ஒரு சம்பவம், மற்றும் முடிவுக்கான வகைப்படுத்தலுடன் எழுத செய்வதற்குப் பயிற்சிகள் வழங்குங்கள்.
    - **உதாரணம்**: "படித்ததைப் பற்றிய ஒரு நிஜமான கதை எழுதுங்கள்."( புத்தகப் பூங்கொத்து .....)
4. **வினா விடை**:
    - **எழுதுவதற்கான வினா–விடை**: குழந்தைகளை எழுதிய உரை அல்லது படங்களைப் பார்த்து அதன் மீது விளக்கங்கள் அல்லது கேள்விகளைக் கேட்கும் பயிற்சிகள் செய்யுங்கள். இது அவர்களின் எழுத்துத் திறனை விளக்குவதாக அமையும்.
    - **உதாரணம்**: "இந்தக் கதையின் முடிவு எப்படி இருக்க வேண்டும்?" அல்லது "இந்த கதையை எழுதும்போது நீங்கள் எதைப் பற்றி யோசித்தீர்கள்?"
5. **ஒவ்வொரு நாளும் எழுதுதல் பழக்கம்**:
    - **எழுதுதல் பழக்கத்தைத் தினசரி பயிற்சியாக செய்யுங்கள்**: ஒரு சிறிய பத்தி அல்லது ஒரு கதை எழுதுவதற்குக் குழந்தைகளை ஊக்குவிக்கவும்.
    - **உதாரணம்**: "நாளை பள்ளியில் நடக்கப் போகும் ஆண்டு விழா நிகழ்வு பற்றிய ஒரு கட்டுரை எழுதுங்கள்."
6. **திறமையான தலைப்புகளுடன் எழுத்து**:

- **தலைப்புகள் கொடுத்து எழுத வைக்கவும்**: மாணவர்களுக்கு ஒரு தலைப்பு கொடுத்து, அதனைப் பற்றி விரிவாக எழுதச் சொல்லுங்கள்.
- **உதாரணம்**: "நான் ஒரு நாள் செய்யும் பயணம்" அல்லது "என் செல்லப்பிராணி."

7. **சிறு எழுதுதல் பயிற்சிகள்**:
   - **சிறு பத்திகளை எழுதுவதற்கு மாணவர்களை ஊக்குவிக்கவும்**. குழந்தைகளின் எழுத்து திறனைப் பொறுத்து, பலவகையான பயிற்சிகளை செய்து, அவர்கள் தங்கள் திறனை வளர்க்கின்றனர்.
   - **உதாரணம்**: "இந்த வார இறுதியில் என்ன செய்யவேண்டும்? அதைப் பற்றி ஒரு பத்தி எழுதுங்கள்."
8. **பிழைகளை திருத்துதல்**:
   - **பிழைகளை சரி செய்யும் பயிற்சிகள்**: குழந்தைகள் எழுதியதைப் பாராட்டிக், அவர்களின் பிழைகளை சரிசெய்யவும். அது அவர்களின் சிந்தனை மற்றும் எழுதுதல் திறனைக் கூட்டும்.
   - **உதாரணம்**: "இந்தக் கதையை வாசித்து, பிழைகளைச் சரி செய்யுங்கள்."
9. **செயல்பாடுகளுக்கு ஏற்ப எழுதுதல்**:
   - **குறிப்புகள், அறிவுரைகள் எழுதுதல்**: மாணவர்களுக்கு ஒரு செயலை எவ்வாறு செய்ய வேண்டும் என்பதை விளக்கும் குறிப்பு எழுத வைக்கவும்.
   - **உதாரணம்**: "சங்கீதம் செல்வதற்கான வழிமுறைகள்."
10. **குழந்தைகளின் அனுபவங்களை எழுத வைக்கவும்**:
    - **சிறந்த அனுபவங்கள்**: குழந்தைகள் அவர்களது வாழ்க்கையில் முக்கியமான அல்லது சுவாரஸியமான அனுபவங்களைப் பற்றிய கதைகள் எழுத வேண்டும்.
    - **உதாரணம்**: "நீங்கள் கடைசியாக சென்ற ஒரு சுற்றுலாவைப் பற்றி எழுதுங்கள்."

**எழுதுதல் பழக்கம்**

- **ஒவ்வொரு நாளும் சிறிய எழுத்துப் பயிற்சிகள்**: மாணவர்களுக்கு தினசரி சிறிய எழுத்துப் பயிற்சிகளை

வழங்குங்கள். உதாரணமாக, ஒரு வாரத்தில் குறைந்தபட்சம் , விடுகதைகள்,சிறிய பாடல், ஏதேனும் பிடித்த ஒன்றைப் பற்றி ஒரு பத்தி, ஒரு சிறிய உரையாடல், ஒரு கடிதம், கதைப்பிரிவு அல்லது அஞ்சல் எழுதுவதற்கான பயிற்சிகள். இது அவர்கள் எழுதுவதற்கு உற்சாகத்தை உண்டாக்கும்.

**தமிழ் மொழி வளம் பெருக, கேட்கப்படும் வினாக்களுக்கு மாணவர்கள் தாங்களாகவே சிந்தித்து விடை அளிக்கும் உத்திகளை உருவாக்கும் வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருதல்.**

**சிந்தனை செய்! செயல்படு! உருவாக்கு! படித்து மகிழ்!**

1. ஒரு சொல்லில் இருந்து உனக்குத் தெரிந்த பல சொற்களை உருவாக்கு!
2. அச்சொற்களுக்குத் தொடர்புடைய பல சொற்களைச் சிந்தித்து எழுதுக.
3. அச்சொற்களைப் பயன்படுத்தி புதிய தொடர்களை உருவாக்கு!
4. அத்தொடர்களைப் பயன்படுத்தி ஒரு கதையை வடிவமைக்க!
5. அத்தொடர்களைப் பயன்படுத்தி ஒரு பாடல் உருவாக்கு!
6. செய்திகள், விடுகதைகள், கவிதைகள் உருவாக்க முயற்சி செய்!
7. ம வரிசை சொற்களைக் கொண்டு தொடர் எழுத முயற்சி செய்!

**பயிற்சித் தாள் -1.**

**உங்கள் சிந்தனையைத் தூண்ட இதோ ஒரு செயல்பாடு. புரிந்துகொள், முயற்சி செய், ஐயம் இருப்பின் வினவுங்கள்.**

1. **விண்மீன்கள் - இச்சொல்லிலுள்ள எழுத்துகளைப் பயன்படுத்தி புதிய சொற்களை உருவாக்கு.**
   **விண்மீன்கள்** – விண், மீன், கள், மீன்கள், கண், கவி, கவின் ( ஒரு சொல்லிலிருந்து உருவாக்கப்பட்ட புதிய சொற்கள் )
   **திருவிளையாடல்**
   **திரு, விளை, வில், விடல், திடல், தில், யாரு, யாருடல், விதி,**
2. **அச்சொற்களுக்குத் தொடர்புடைய பல சொற்களைச் சிந்தித்து எழுதுக!**
   **விண்** – நட்சத்திரம், மேகம், நிலா, சூரியன், கோள்கள், காற்று, பால்வெளி, அண்டம், விண்மீன். (அச்சொற்களுக்குத் தொடர்புடைய பல சொற்களைச் சிந்தித்து எழுதுதல்)

**மீன், மீன்கள்** – ஆறு, குளம், குட்டை, ஏரி, கண்மாய், கடல், வாய்க்கால், கிணறு, பெருங்கடல், மீன்தொட்டி, வண்ண மீன்கள், விரால் மீன், பாறை மீன், ஜிலேபி மீன், கட்லா மீன், கெண்டை மீன், ரோகு மீன், கெளுத்தி மீன், விரால் மீன்.

**கள்** – தென்னை, பனை மரங்களிலிருந்து கிடைக்கும் நீர்மம், பன்மை விகுதி, பலவின் பால் அறி சொல்,

**கண்** – உடல் உறுப்பு, ஐம்புலன்களுள் ஒன்று. காண்பதற்கு உதவுவது கண்.

**கவி** – கவிதை எழுதுபவர், பாடல், கவிஞர் எழுதும் கவி.

**கவின்** – அழகு, எழில், ஆண் குழந்தைகளுக்குச் சூட்டும் பெயர்.

3. **அச்சொற்களைப் பயன்படுத்தி புதிய தொடர்களை உருவாக்கு!**

வானத்தில் விண்மீன்கள் இரவில் தங்கமென மின்னும்.
நட்சத்திரங்கள் சூழ முழு நிலா வானில் வலம் வரும்.
பால்வெளியில் பல அண்டங்கள் உள்ளன.
மேகம் நிலவை சில சமயங்களில் மறைத்து நிற்கும்.
முழுநிலவு நாள்களில் கன்னியாகுமரியில் நிலவு தோன்றுவதையும் சூரியன் மறைவதையும் ஒரு நேரத்தில் பார்க்கலாம்.

4. **அத்தொடர்களைப் பயன்படுத்தி ஒரு கதையை வடிவமைக்க!**

முழுநிலா வானில் தன் குளிர்ந்த கரங்களால் ஒளியை அள்ளி வீசிக்கொண்டிருந்தது. நீர்நிறைந்த வெளிகளில் துள்ளும் மீன்கள் நிலவொளியில் குதூகளித்தன. ஆ! ஆ! எத்தனை இன்பமென துள்ளி குதித்தன. பால்வெளியில் விண்மீன்கள் தங்க மொட்டுகளாய் மின்னித் திளைத்தன. ஒரு பசுமையான மரம் ஒன்று நிலவைக் கண்டு, சூரியன் என்னிடம் தானே உயர்ந்தவன் என்றும் என்னால்தான் உயிரினங்கள் வாழ்கின்றனவென்றும் உரைத்தது. ஆனால் நான் இன்று உன் ஒளியிலும் மகிழ்வாக உள்ளேனே! என்றது. இதை சூரியனிடமே கேள் என்றது நிலவு. அதைக்கேட்ட மரம் அடுத்தநாள் சூரியனிடம் கூறியது. அதை ஏற்க மறுத்த சூரியன் தானே உயர்ந்தவன் என்று ஆணவமாகப் பேசியது. பின்னர் தனியாக எண்ணிப் பார்த்தது. அவரவர்க்கென தனித்துவம் ஒன்று உண்டு என்பதை உணர்ந்து மரத்திடம் தான் கூறியது தவறு என்பதை ஒப்புக்கொண்டது. ஏதாவது ஒவ்வொரு வகையில் ஒவ்வொன்றிலும் ஒரு தனித்துவம் உண்டு என்பதை உணர்வோமா?

5. **அத்தொடர்களைப் பயன்படுத்தி ஒரு பாடல் உருவாக்கு!**

மீன் மீன் மீன்
வானத்திலே விண்மீன்
கடலிலே பாறைமீன்
குளத்திலே கெண்டைமீன்
ஏரியிலே கட்லா மீன்

கண்மாயிலே ஜிலேபி மீன்
குட்டையிலே ரோகு மீன்
கிணற்றிலே குரவை மீன்
மீன் மீன் மீன் மின்.
பசுவும் ஆடும் தருவது பால் பால்
பனையும் தென்னையும் தருவது கள் கள்
மாவும் பலாவும் தருவது பழம் பழம்
ஆலும் அரசும் தருவது நிழல் நிழல்
(அத்தொடர்களைப் பயன்படுத்தி ஒரு பாடல் உருவாக்கு!)

6. **விடுகதைகளுக்கு விடை கூறு.**
அப்பா பணத்தை எண்ண முடியாது அது என்ன?
சொல் விளம்பி என்பது எது?
வெள்ளை திரையில் கருப்பு முட்டை அது என்ன?
**பின்வரும் தொடர்கள் ஒவ்வொன்றிலும் ஓர் எழுத்தை எடுத்து அவற்றைச் சேர்த்தால் வானத்தில் இரவில் தோன்றுபவற்றின் ஒன்றின் பெயராக அது இருக்கும். அது எது?**
விதையில் உண்டு கதையில் இல்லை
கண்ணில் உண்டு பின்னலில் இல்லை
மீட்சியில் உண்டு காட்சியில் இல்லை
தண்ணீரில் உண்டு பன்னீரில் இல்லை
கள்ளியில் உண்டு பள்ளியில் இல்லை
நாள்களில் உண்டு நாட்களில் இல்லை
**விண்மீன் பற்றி நீங்கள் அறிந்த செய்திகளை எழுது.**
விண்மீன் என்பது வானத்தில் காணப்படும் ஒளிரும் கோளாகும். விண்மீன்களை நட்சத்திரம், நாள்மீன் என்றும் கூறுவர். புமிக்கு மிக அருகில் உள்ள விண்மீன் சூரியன் ஆகும். இரவு நேரங்களில் வானத்தில் புள்ளிபோல் தெரியும் விண்மீன்கள் கண்சிமிட்டுசதுபோல் தெரிவது புமியின் வளிமண்டலத்தின் தாக்கத்தால் ஆகும். புமிக்கு அருகில் உள்ள நட்சத்திரம் சூரியனாகும். ஆகையால் சூரியன் புமிக்கு அண்மையில் உள்ளதால் மற்றைய விண்மீன்களைப் போலல்லாதுமு வட்டமான தட்டுப்போல் தெரிகிறதோடு மட்டுமன்றி பகலில் வெளிச்சமும் தருகிறது.
(செய்திகள், விடுகதைகள், கவிதைகள் உருவாக்க முயற்சி செய்!)

7. ம வரிசை சொற்களைக் கொண்டு தொடர் எழுத முயற்சி செய்!
**ம**ணலோரம் **மா**மரமொன்று **மி**டுக்காய் **மீ**ன்களை **மு**றைத்து **மூ**டிய **மெ**ன்மையான **மே**னியில் **மை**யுடன் **மொ**த்த **மோ**கனமாய் நின்ற **மௌ**ரியைப் பார்த்துச் சிரித்தது.

**பயிற்சித் தாள் -1.**

**அ) விண்மீன்கள் - இச்சொல்லிலுள்ள எழுத்துகளைப் பயன்படுத்தி புதிய சொற்களை உருவாக்கு.**

------------------------------------------------------------------------------------------------------------
--------------------------------------------

ஆ) **அச்சொற்களுக்குத் தொடர்புடைய பல சொற்களைச் சிந்தித்து எழுதுக!**

இ) **அச்சொற்களைப் பயன்படுத்தி புதிய தொடர்களை உருவாக்கு!**

----------------------------------------------------------------------------------------------------
-----------

ஈ) **அத்தொடர்களைப் பயன்படுத்தி ஒரு பாடல் உருவாக்கு!**

**-------------------------------------------------------------------------------------------உ) விண்மீன் பற்றி நீங்கள் அறிந்த செய்திகளை எழுது.**

**பயிற்சித் தாள் – 2**

**இருக்கும் ஆனால் இருக்காது…… வாங்க பார்க்கலாம்**
**கீழே கொடுக்கப்பட்டுள்ள பெயர்களைக் கொண்டு புதிய பெயர்களை எழுதுக.**

| | |
|---|---|
| சிவஆதித்தியன் | மலர்க்கொடி |
| கலைச்செல்வி | கோப்பெருந்தேவி |
| தில்லையரசன் | மணமலர்செல்வி |
| மணிவண்ணன் | உமாதேவி |
| செந்தில்குமார் | கண்ணன் |

ஆதி **கண்ணன்**, மலர்**வண்ணன்**, செந்தில் **தில்லை**, **சிவ**மணமலர், **தில்லை**பெருந்தேவி, தில்லை**செல்வி**, கலைமணி, தில்லைதேவி, தேவிமலர், சிவகண்ணன், மலர் அரசன், மலர்செல்வி, கோவண்ணன், ஆதியரசன், கலைபெருந்தேவி…..

**பயிற்சித் தாள் – 3**

**அறிந்ததை நினைவில் வை, தெரிந்ததை உணர்ந்து எழுது – நானே செய்வேன்!**
**கேட்கப்படும் வினாக்களுக்கு க, கா, கி…. வரிசையில் விடையளி ( க, கா, கி, கீ…..)**
**இனிப்புச் சுவையுடையது – கரும்பு**
**காதில் அணிவது – காதணி**

**பயிற்சி கொடுத்தால் சொல்வதைத் திரும்பச் சொல்லும் - கிளி**
**இந்துக்களின் புனித நூல் – கீதை**
**நெற்றியில் இடுவது – குங்குமம்**
**ஆமையின் மறுபெயர் – கூர்மம்**
**மீன் வகைகளுள் ஒன்று – கெழுத்தி மீன்**
**நட்பைக் குறிக்கும் சொல் – கேண்மை**
**உடல் உறுப்புகளுள் ஒன்று – கை**
**குளத்தில் மீன் பிடிக்கக் காத்திருக்கும் பறவை – கொக்கு**
**வாசலில் போடுவது - கோலம்**
**பறவைகளுள் ஒன்று –கௌதாரி.**

**பயிற்சித் தாள் –4**

நான் தனியாக மட்டும் பொருள் தருபவன் அல்ல ! என்னைப் பிரித்தாலும் நான் பொருள் தருவேன்! நான்…..

கோவை - கோ, வை
பாதை – பா, தை
ஆமை – ஆ, மை
தீமை – தீ, மை
பூவை – பூ, வை
வாகை – வா, கை
வைகை – வை, கை
பாவை – பா, வை
மைதா – மை, தா
போதை – போ, தை

**பயிற்சித் தாள் –5**

நான் ஓர் எழுத்தாவேன். எனக்கும் பெயருண்டு. நான் யார்?
பறக்கும் எழுத்து எது? ஈ
மணக்கும் எழுத்து எது? பூ
அழைக்கும் எழுத்து எது? வா
கேட்கும் எழுத்து எது? தா
சுமக்கும் எழுத்து எது? பை
சுடும் எழுத்து எது? தீ
கிளப்பும் எழுத்து எது? போ
கண்களை அழகாக்கும் எழுத்து எது? மை
பால் தரும் எழுத்து எது? ஆ
சோலையைக் குறிக்கும் எழுத்து எது? கா

**பயிற்சித் தாள் –6**

**கை என்னும் எழுத்தைப் பயன்படுத்தி** கேட்கப்படும் வினாக்களுக்கு **கை** என்ற எழுத்தைக்கொண்டு விடை எழுதுக.

1. நெருப்பில் இருக்கும் கை …….புகை

2. தலையில் வளரும் கை ……….சிகை
3. ஆதிமனிதன் வாழ்ந்த கை ………குகை
4. எதிரியிடம் கொள்ளும் கை ……..பகை
5. பெண்கள் அணியும் கை …….நகை
6. மயிலிடம் உள்ள கை ……….தோகை
7. வீரர்கள் சூடும் கை ……….வாகை
8. காலில் அணியும் கை …… சலங்கை.
9. அண்ணனின் அன்பு கை ……….. தங்கை
10. உதட்டில் தவழும் கை ……… புன்னகை
11. கோயிலில் **பூ**சாரி வைத்திருக்கும் கை ………. உடுக்கை
12. யானைக்கே உரிய கை …… தும்பிக்கை
13.தலையில் விழும் கை ……….. வழுக்கை
14.நாடகத்திற்குமுன் போடும் கை ………ஒத்திகை
15. உட்கார உதவும் கை ………… இருக்கை
16. பறவையிடம் இருக்கும் கை ……. இறக்கை
17. மதுரையில் ஓடும் கை …………… வைகை
18. வாசம் தரும் கை ………….. மல்லிகை
19. மாவு இடிக்க உதவும் கை …….உலக்கை
20. படுக்க உதவும் கை …………… படுக்கை
21. சினிமாவில் நடிக்கும் கை ……… நடிகை
22. கா கா எனக் கரையும் கை …….. காக்கை
23. உள்ளங்கையில் இருக்கும் கை …… ரேகை
24. காட்டில் வாழும் கை ………….. வேங்கை
25. கழுத்தில் அணியும் கை ……… அட்டிகை
26. உன்னிடம் உள்ள கை……….நம்பிக்கை

**பயிற்சித் தாள் 7**

**என்னுடைய உறவினர்களுடன் சேர்ந்து வாழ்வேன். பொருள் தருவேன்…**

**ஆம்…. புரிந்துகொண்டீர்களா…. ( க கா கி கீ கு கூ கெ கே கை கொ கோ கௌ . இதனைப் போலவே பிற எழுத்துககளும்…)**

கங்கையில் காவல் கிடந்து கீரியைக் கெட்டவனாய் கேட்டினைக் கை கொண்டவனென்று கோவத்தோடு கௌரியை வேண்டினேன்.

**ம**ணலோரம் **மா**மரமொன்று **மி**டுக்காய் **மீ**ன்களை **மு**றைத்து **மூ**டிய **மெ**ன்மையான **மே**னியில் **மை**யுடன் **மொ**த்த **மோ**கனமாய் நின்ற **மௌ**ரியைப் பார்த்துச் சிரித்தது.

**ப**ழம் **ப**ழுத்து **பா**லில் **பி**ய்த்து **பீ**டித்துப் **பு**தைந்ததைப் **பூ**ரிப்புடன் **பெ**ண் **பே**ரழகியாக **பை**ய **பொ**றுமையான **போ**க்குடன் பார்த்தது **பௌ**வம்.

தன்னம்பிக்கையைத் தாங்கிய திங்கள் தீபமாக துய்க்க தூபமேற்றி தெற்கில் தேடிய தையலைத் தொடங்கும் தோல்வியாக தௌவல்.

வண்ண வாயிலில் விண்மீன்கள் வீடுகட்டி இச்சவ்ஈடு வெற்றியுடன் வேறுபட்ட இவ்வையத்தில் ஒவ்வொன்றும் வௌவாலாய் தெரிகிறது.

கண்ணன் காலையில் கிழிந்த கீற்றில் குட்டிக் கூடையைக் கெட்டியாகக்கேட்டுக் கேட்டு கையினாலேயே கொஞ்சம் கோணல்மாணலாக கௌரவமாகச் செய்தான்.

கண்மணி காலையில் கிண்ணங்களில் கீரை, குழம்பு, கூட்டு, கெட்டியான கேழ்வரகு கூழை கையிலெடுத்து கொல்லையிலிருந்த கோவலனுக்கும் கௌரிக்கும் கொடுத்தாள்.

இவற்றைப் போல த, ப, ம, ச போன்ற சொற்களுக்கும் எழுதுங்கள் பார்ப்போம்.

**கல் எடுத்தாள், காலில் விழுந்த்து. கிழவி வந்தாள் கீழே அமர்ந்தாள் கெட்டித் துணியை கேடு வராமல் கையால் கிழித்தாள் மருந்தை கொட்டினாள் கோவப்படாமல் கட்டினாள் கௌதமி சிரித்தாள்.**

**பஞ்சு மேகம் பாதியில் பறந்து பிஞ்சு மாங்காயைப் பீடித்தது. புல்லாங்குழலில் புவை வைத்து பெட்டி மேலே பேனாவினால் பையில் எழுதி பொறுப்பாகப் போகையிலே பௌத்தம் என்னை ஏற்றுக்கொண்டது.**

**பயிற்சித் தாள் 8**

**மாறியுள்ள எழுத்துகளை வரிசைப்படுத்தி பொருள் தரும் சொல்லாக மாற்றுக. மாற்றுவாயா…..**

ளைட்வியாடு - விளையாட்டு
ள்வதிளுருர்வ – திருவள்ளுவர்
த்பம்திருசெ – செம்பருத்தி
யாலைர்தசிமைரிய – தலைமையாசிரியர்
ளைதில்ருவிடயா - திருவிளையாடல்.

**பயிற்சித் தாள் – 8**

**என்னை நினைத்தால் எண்ணற்றவை நினைவில் வரும். நினைத்துப் பார்….**

**பள்ளி – வகுப்பறை, ஆசிரியர், மாணவர்கள், பாடநூல், கரும்பலகை, விளையாட்டு மைதானம், மதிய உணவு, காலை சிற்றுண்டி, கணினி, கொடிக்கம்பம், தேசியக்கொடி, தேசியக் கொடி, தமிழ்த்தாய் வாழ்த்து, உறுதிமொழி, நூலகம், பயிற்சி ஏடுகள், இடைவேளை, உணவு இடைவேளை, குறிப்பேடு, பேனா, பென்சில், அழிப்பான், தலைமை ஆசிரியர், கைப்பந்து,**

**கூடைப்பந்து, மக்கும் பொருட்களுக்கான குப்பைத்தொட்டி, மக்காத பொருட்களுக்கான குப்பைத்தொட்டி,**

**விவசாயம் –**
**மளிகைக் கடை-**
**திருப்பதி-**
**மாம்பழம்-**
**பேருந்து நிலையமை-**
**தொடர்வணடி நிலையம்-**
**பயிற்சித் தாள் 9**

**கீழே கொடுக்கப்பட்டுள்ள எடுத்துக்காட்டைப்போல உங்களாலும் உருவாக்க முடியுமே!**

**முதல் எழுத்து ஒரே எழுத்தாக அமையமாறு சொற்களை அமைத்து படித்து மகிழ்வோமா!**

**உங்களுக்காக....**

1. இந்த இலையை இங்கே இப்படி இடாதே.
2. அம்மா அன்பை அணிகலன்களாக அணிந்த அணங்கு.
3. எங்கள் எண்ணங்கள் என்றும் எதிர்நீச்சலை எழுச்சியுடன் எதிர்பார்க்கும்.
4. ஆயிரம் ஆடு ஆனந்த ஆட்டம் ஆடின.
5. உலகம் உத்தமர்கள் உளமாற உறுதிகொண்டு உண்மையாக உழைத்தனர்.
6. மனம் மகிழ்வோடு மனிதனை மனிதனாக்க மன்றத்தில் மன்றாடுகிறது.
7. திங்கள் திவலைகள் தித்திக்கும் திசையெங்கும் திரவியமாய் திகழ்கிறது.
8. கண்ணன் களிநடனம் கண்முன் கண்டால் கலியுகத்தில் கண்கள் களிப்படையும்.
9. நீண்டநேரம் நீந்தும் நீரிருந்த நீர்நிலைகளில் நீச்சல் பறவைகள்.
10. தங்கள் தகைமை தங்களின் தன்கடமைகள் தளிர்ப்பதால் தவமாகிறது.

**பயிற்சித் தாள் 10**

1. இலையை சிலை ஆக்கலாம் வாங்க
   இலை அலை தலை கலை மலை சிலை
2. விண்ணை மண் ஆக்கலாம் வாங்க
   விண் திண் கண் எண் மண்
3. நாயை நரி ஆக்கலாம் வாங்க.....

நாய் காய் பாய் பாரி நரி

4. காசை கரி ஆக்கலாம் வாங்க
   காசு மாசு தூசு மாரி கரி
5. பகலை இரவாக்கலாம் வாங்க
   பகல் பரல் விரல் விரவு இரவு
6. இலையை சிலை ஆக்கலாம் வாங்க
   இலை அலை தலை கலை மலை சிலை
7. பாயை நாயாக்கலாம் வாங்க
   பாய், காய், வாய், சேய், நாய்
8. கசப்பை இனிப்பாக்கலாம் வாங்க
   கசப்பு, புளிப்பு, களிப்பு, இளிப்பு, இனிப்பு
9. தேரை தினை ஆக்கலாம் வாங்க
   தேர் கார் பார் பானை யானை தினை
10. நீரை மோர் ஆக்கலாம் வாங்க
    நீர் கார் பார் தேர் போர் மோர்

**பயிற்சித் தாள் - 11**

**படத்தைப் பார்.... உன்னில் தோன்றும் வினாக்களை என்னிடம் கேட்பாயாக.......**

**உன்னுள் தோன்றும் வினாக்களை எழுதி வருக.**



**படத்தைப் பார்.... உன்னில் தோன்றும் வினாக்களை என்னிடம் கேட்பாயாக.......**

**உன்னுள் தோன்றும் வினாக்களை எழுதி வருக.**



**பயிற்சித் தாள் 12**

எதுவும் பேசாமல் கரும்பலகையில் பின்வரும் ஐந்து சொற்களை எழுதுங்கள்

சிங்கம், தங்கம், சங்கம், பங்கம், நுங்கம்

இவை போன்று இறுதியில் ஒத்த ஓசை வரும் சொற்களை எழுதுங்கள் பார்ப்போம்...

கன்று, குன்று, நன்று, வென்று, சென்று

**பயிற்சித் தாள் – 13**

**நான் பாதி நீங்கள் பாதி**

நாம் வாக்கிய ஜோடிகள் எழுதப் போகிறோம். ஒரு வாக்கியத்தை நான் எழுதுவேன். அடுத்த வாக்கியத்தை நீங்கள் சொல்ல வேண்டும். அது நான் எழுதும் வாக்கியத்திற்குச் சோடியாக இருக்கிறதா என்பதுதான் பிரச்சனை. யார் சொல்கிறீர்கள் பார்க்கலாம் என்றபடி பின்வரும் வாக்கியத்தைஅமைதியாகக் கரும்பலகையில் எழுதுங்கள்.

அழகாகக் கொட்டுது அருவி

குழந்தைகள் தாங்கள் விரும்பிய வரிகளைச் சொல்லட்டும். அவற்றை ஏற்றுக்கொண்டு கரும்பலகையில் எழுதுங்கள். அவ்வாக்கியங்களுள் அழகாய் பறக்கும் குருவி என்றோ அதன் அருகே பறக்குது குருவி என்று சொல்கிறார்களா என்று பாருங்கள். முதல் அனுபவமாக இருப்பதால் சிலவேளை அவர்களுக்கு இச்செயல்பாடு புரியாமல் இருக்கலாம். அப்படியானால் குழந்தைகள் சொன்ன வரிகளுடன் நானும் ஒரு வரி எழுதுகிறேன் என்றபடி அதன் அருகே பறக்குது குருவி என்று எழுதுங்கள்.

பிறகு நான் முதலில் எழுதிய வாக்கியத்தின் சோடி வாக்கியம் இவற்றுள் எது, ஏன்? என்று கேட்டுக் கலந்துரையாடுங்கள். இறுதிச் சொற்கள் ஒத்த ஓசையுடைய சொற்களாக இருக்க வேண்டும் என்பதைக் குழந்தைகளே சொல்கிறார்களா என்று பாருங்கள்.

அழகாய் பாடுது குயில்

……………………………………………

பச்சைப் பசேலென நெல் வயல்

……………………………………

வானில் போகுது வட்டநிலா

……………………………………..

போன்ற வரிகளைக் கரும்பலகையில் எழுதுங்கள். இவற்றில் சோடி வரிகளைக் குழந்தைகள் எழுத முயற்சி செய்யட்டும்.

**பயிற்சித் தாள் – 14**

**பின்வரும் வாக்கியத்தைப் படித்துப் பார் அவற்றிற்குரிய விடையை எழுத முயற்சி செய்.**

வெள்ளியை உருக்கி ஊற்றியது போல…..


பச்சைக் கம்பளம் விரித்தாற்போல….


வானத்தில் வைத்த விளக்குபோல…..

பட்டாசு படபடவெனவெடித்ததைப் போல….

**8.7 தரவுகளைப் பகுப்பாய்வு செய்தல்**

முன்தேர்வு மற்றும் பின்தேர்வில் ஆசிரியர்கள் பெற்ற மதிப்பெண்களைக் கூட்டி மொத்த மதிப்பெண்களின் சராசரி கண்டுபிடிக்கப்பட்டது.




**முன்தேர்வு** **பின்தேர்வு**

**10. பகுப்பாய்வு மற்றும் விளக்கம்:**

முன்தேர்வுக்குப் பயன்படுத்தப்பட்ட வினாத்தாளே பின்தேர்வுக்கும் பயன்படுத்தப்பட்டது. பின்தேர்வு விடைத்தாள்களைப்

பகுத்தாய்ந்தபோது முன்தேர்வைவிட ஆசிரியர்கள் எழுதுதல் உத்திகளைப் பின்பற்றி கற்பித்தலால் மாணவர்களின் கற்றல் அடைவு மேம்படுத்தப்பட்டிருப்பதை அவர்கள் அளித்த பின்தேர்வு முடிவுகளால் அறிய முடிகிறது. மாணவர்களிடம் வருக்க எழுத்துகளை வரிசையாக எழுதக் கற்றுக் கொடுத்த பின்னர் அவர்கள் வரி வடிவத்தையும் அவ்வெழுத்துகளால் தொடங்கும் சொற்களையும் எழுதப் பழகியதால் புதிய தொடர்களையும் எழுத முடிகிறது என்பதை ஆசிரியர்களால் அறியப்பட்டது. மாணவர்கள் புதிய சொற்களை உருவாக்குவதிலும் அவற்றைக்கொண்டு தொடர் அமைப்பதிலும் ஆர்வம் காட்டுவதையும் பயிற்சித்தாள்களில் ஒவ்வொரு செயல்பாடுகளாகச் செய்ய வைப்பதால் அவற்றைக் கையாள்வதில் விருப்பமுடன் செயல்படுவதையும் பள்ளிப் பார்வையின்வாயிலாக அறியப்பட்டது..

முன்தேர்வு பின்தேர்வுப் பகுப்பாய்வில் முன்தேர்வில் 32. 75 சதவீதமும், பின்தேர்வில் 66.8 சதவீத மதிப்பெண்களும் பெற்றிருந்தனர். முன்தேர்வு பின்தேர்வு இரண்டையும் நோக்கும்போது செயலாய்வில் பயிற்சியின்போது விளக்கப்பட்ட கருத்துகளையும், வழங்கப்பட்ட பயிற்சிக் கையேட்டில் உள்ள உத்திகளையும் அவர்கள் வகுப்பறையில் கற்பித்தலின்போது பயன்படுத்தியுள்ளனர். ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்ட பயிற்சியின் தாக்கம் மாணவர்களைச் சிறப்பாகச் சென்றடைந்துள்ளதாக விளக்கம் அளிக்கின்றனர் ஆசிரியர்கள்.

வரைபடத்தில் முன்தேர்வுக்கும் பின்தேர்வுக்கும் மதிப்பெண் சராசரியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் உள்ளது.

**11.செயல் ஆய்வில் கண்டறிந்தவை**

- முன்தேர்வு பின்தேர்வுப் பகுப்பாய்வில் முன்தேர்வில் 32. 75 சதவீதமும், பின்தேர்வில் 66.8 சதவீத மதிப்பெண்களும் பெற்றிருந்தனர்.
- மாணவர்கள் எழுதுதல் செயல்பாட்டில் அதிகம் ஆர்வம் காட்டவில்லை. தொடர் பயிற்சியினால் ஊக்கப்படுத்தி எழுதுதல் செயல்பாடுகள் மேற்கொள்ளப்படுகிறது.
- கொடுக்கப்பட்ட பகுதிகளைப் பார்த்து மட்டுமே எழுதுவதாயின் மாணவர்கள் மிகவும் ஆர்வமாக உள்ளனர். அதைப் புரிந்துகொண்டு மீண்டும் சொல்ல வேண்டும், வினாக்களுக்கு விடையளிக்க வேண்டுமெனில் எழுதுவதில் ஆர்வம் குறைகிறது.
- சில மாணவர்கள் மிகவும் சிறப்பாக எழுதுகின்றனர்.
- மாணவர்கள் சிந்திக்க வாய்ப்பு அளிக்கும்போது சிறப்பாக எழுதுகின்றனர்.
- ஆசிரியர்கள் எழுதுதல் பயிற்சிக்கென நேரம் ஒதுக்க முடியவில்லை. இவ்வாறு பயிற்சிகள் கொடுத்தாலும் அவற்றை மேலும் சிந்திக்க வைக்க நேரம் கிடைப்பதில்லை என்ற கூற்று முன்வைக்கப்படுகிறது.

**12.செயல் ஆராய்ச்சியின் நன்மை**

ஒரு சொல்லை வைத்துப் பல சொற்களையும் தொடர்களையும் உருவாக்குவதில் ஆர்வமாக உள்ளனர். மாணவர்களுக்கு வாய்ப்புகளை உருவாக்கிக்கொடுத்தால் அவர்கள் சிறப்பாகச் செயல்படுகின்றனர். சில மாணவர்களை எழுத வைக்க போராடவும் வேண்டியுள்ளது. அது அவர்களை ஊக்கப்படுத்துவதாகவும் அமைகிறது. சில மாணவர்கள் எழுத்துப் பிழைகளுடன் எழுதினாலும் தொடர் அமைப்பு சரியாக உள்ளது.

**13.செயல் ஆய்வு முடிவடைதல்**

தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் மாணவர்களின் எழுதுதல் திறனை மேம்படுத்துவதற்கான உத்திகளைப் பயிற்சித்தாள்கள் வயிலாக மேம்படுத்துதல் என்னும் இச்செயலாய்வானது திட்டமிட்டு முன்தேர்வு, ஆசிரியர்களுக்கான ஒரு நாள் பயிற்சி, பயிற்சித் தாள் அடங்கிய பயிற்சிக் கட்டகம், வகுப்பறையில் மாணவர்களுக்கு அளிக்கப்பட்ட பயிற்சிகள் வாயிலாக பயிற்சித்தாள்கள் கொடுத்து மாணவர்களின் எழுதுதல் திறனை மேம்பாடடையப் பயிற்சியளிக்கப்பட்டது. பின்னர் ஆசிரியர்களுக்கு பின்தேர்வு வைக்கப்பட்டு மதிப்பெண்களின் சராசரியைக் கொண்டு இவ்வாய்வு பயனுள்ளதாக இருக்கிறது என்பதை உறுதிசெய்யப்பட்டது.

**14.பரிந்துரைகள் மற்றும் கல்வி வழிகாட்டுதல்கள்**

வகுப்பறையில் சூழலுக்கேற்ப மாணவர்களுக்கு எழுதும் வாய்ப்புகளை ஆசிரியர்கள் வழங்கிட வேண்டும்.

நாள்தோறும் எழுதுவதற்குரிய செயல்பாடுகளை வீட்டுப்பாடமாகக் கொடுக்கப்பட வேண்டும்.

சொந்தமாக சிந்தித்து எழுதிய கதைகள், பாடல்கள், படம் மற்றும் விளக்கங்கள் போன்றவற்றை வெளிப்படுத்த வழிபாட்டுக் கூட்டத்தில் வாய்ப்புகள் வழங்கலாம்.

மாணவர்கள் சொந்தமாக எழுதுவதற்கான வாய்ப்புகளை போட்டிகள், மன்றங்கள் வாயிலாக ஏற்படுத்தித் தர வேண்டும்.

எழுதுதல் திறன் என்பது தொடர்ந்து மாணவர்களிடையே மேம்படுத்த வேண்டிய வெளியிடும் திறன்களுள் ஒன்று.

ஒவ்வொரு காலகட்டங்களிலும் புதிய பல உத்திகளை ஆசிரியர்கள் பின்பற்றி கற்பித்தல் பணியை சிறப்பாக்குகின்றனர்.

இருப்பினும் எழுதுதல் திறனுக்கென அதிக முக்கியத்துவமும் அதிக நேரமும் செலவழிக்காத நிலைகளில் அவற்றுள் தொய்வு ஏற்படுகிறது.

புத்துணர்ச்சியோடு மாணவர்களை எழுதுதல் திறனில் மேம்பாடடையச் செய்ய இப்பயிற்சித் தாள்கள் வழிகாட்டுகிறது. சொற்களை, தொடர்களை, சொந்தமாக சிந்தித்து எழுதும் திறனை மாணவர்கள் பெற்றிருந்தால் அவர்களால் பாடப் பகுதிகளைப் புரிந்துகொண்டு எழுதும் திறனை வளர்த்துக்கொள்ள முடியும்.

இப்பயிற்சிக் கட்டகத்தில் உள்ள பயிற்சித் தாள்களைப் பயன்படுத்தி பிற ஒன்றியங்களிலும் மாணவர்களின் எழுதுதல் திறனை மேம்படுத்தலாம்.
பாட நூல்களிலும் பயிற்சி ஏடுகளிலும் மதிப்பீடுகளிலும் பயிற்சிக் கட்டகத்தில் உள்ள பயிற்சித் தாள்களைப் பயன்படுத்தலாம்.

**15. ஆய்வு முடிவுகள்**

- ஆசிரியர்கள் கொடுக்கப்பட்ட சொற்களில் உள்ள எழுத்துகளைப் பயன்படுத்தி சிந்தித்துப் புதிய சொற்களை மாணவர்கள் உருவாக்குகின்றனர்.
- மாணவர்கள் ஆசிரியர்கள் கொடுக்கப்பட்ட சொற்களுக்குத் தொடர்புடைய சொற்களைச் சிந்தித்து எழுதும் திறனைப் பெற்றுள்ளனர்.
- மாணவர்கள் கற்றறிந்த, நடைமுறைப் பயன்பாட்டில் பயன்படுத்தும் சொற்களை, தொடர்களை எழுதும் பயிற்சி பெற்றுள்ளனர்.

**பார்வை நூல்கள்**


1. தமிழ்மொழி கற்பித்தல் – தொடக்கக் கல்வி பட்டயப் பயிற்சி, முதல் மற்றும் இரண்டாம் ஆண்டு, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை – 6.
2. படித்தல், எழுதுதல் திறன் வளர்த்தல் பயிற்சிக் கட்டகம், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை – 6,
3. நன்னூல் காண்டிகை உரை, ஆறுமுகநாலவர்
4. நிஸ்தா பயிற்சிக் கையேடு
5. டிஒடி பயிற்சியின் சில உத்திகள்.


**ஆய்வுக் கருவி**

**மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், தருமபுரி**

**செயல் ஆய்வு**

**முன்தேர்வு, பின்தேர்வு வினாத்தாள்**

**ஆய்வாளர்: இரா. மணிமாலா** **காலம்: 90 நிமிடம்**

**மதிப்பெண்:20**

1. அடிப்படைத் திறன்களுள் கொள்திறன், வெ ளியிடு திறன் பற்றி எழுதுக.

2. எழுதுதல் திறன் , எழுத்துத் திறன் வேறுபாடு உள்ளதா? எழுதுக.

3. **என்னுடைய உறவினர்களுடன் சேர்ந்து வாழ்வேன். பொருள் தருவேன்... ஆம்.... புரிந்துகொண்டீர்களா.... ( 1. க கா கி .........வரிசையில் உள்ள சொற்களைக்கொண்டு தொடர் எழுதுக.**

4. விண்மீன்கள் என்ற சொல்லைப் பயன்படுத்தி மாணவர்களின் எழுதுதல் திறனுக்கான செயல்பாடுகளை வடிவமைக்க.

5. நான் தனியாக மட்டும் பொருள் தருபவன் அல்ல ! என்னைப் பிரித்தாலும் நான் பொருள் தருவேன்! நான்...நாங்கள் யார்? 10 சொற்களை எழுதுக.

6. **என்னை நினைத்தால் எண்ணற்றவை நினைவில் வரும். நினைத்துப்பாருங்கள் எழுதுங்கள் -**
   **பள்ளி**

**7.** நான்கு மற்றும் ஐந்தாம் வகுப்பு மாணவர்களின் எழுதுதல் திறனை மேம்படுத்துவதற்கான உத்திகள் ஐந்தினை எழுதுக.

**8.** கை என்ற எழுத்தைப் பயன்படுத்தி 10 வினாக்கள் எழுதவும். **கை** என்ற எழுத்தைப் பயன்படுத்தி அதற்கான விடை எழுதுக.?

**9.** மாணவர்கள் எழுதுதலில் செய்யும் பிழைகள், தவறுகள் எவை?

10. கீழ்க்காணும் படத்தைப் பார்த்து ஐந்து உயர்நிலைத்திறன் வினாக்களை உருவாக்கவும்.



.

**நிழற்படம் மற்றும் இடைவினை நிகழ்வுக்கான படங்கள்**







தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கான முன்தேர்வு மற்றும் பயிற்சி அளித்தல்.







வகுப்பறையில் ஆசிரியர் எழுதுதல் திறனுக்கான உத்திகளைப் பின்பற்றி மாணவர்களை எழுத வைத்தல்.





மாணவர்களின் சிந்தித்து எழுதுதல் பயிற்சியின் முன்னேற்றத்தைக் காட்டும்

நிழற்படம்.


கவிதை

1. இயற்கையை நேசிப்போம்!
செயற்கையுடன் வாழ வேண்டுமா!
என யோசிப்போம்!

2. நெகிழியை வாங்காதே!
நம் பூமி தாங்காதே!

3. துணிப்பை எளிதானது!
தூர எறிந்தால் உரமானது!
நெகிழி அழகானது!
தூர எறிந்தால் விஷமானது!

4. ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்
சுத்தமான காற்றை சுவாசிப்போம்!

5. பசுமையான பூமி- சிறந்த வாழ்க்கை
~~இயற்கையின்~~ அதை அழிக்க வேண்டாம்

6. இயற்கையின் அழகு மரம்!
அழியாமல் காப்பதே அறம்!


இலைகள் சருகானதால் உரமானது! இன்று
ரசாயனமும் உரமானதால் உணவே
விஷமானது.

இனியாவது திருந்துவோம்!
இயற்கையைப் பாதுகாப்போம்!
மரம் நடுவோம்!

## இரண்டு கொக்கும் மீன்களும்

ஒரு ஊரில் குளம் ஒன்று இருந்தது. குளத்தில் நிறைய மீன்கள் வசித்து வந்தன. அந்த குளத்தில் இரண்டு கொக்குகள் வசித்து வந்தன. ~~அந்த~~ தினமும் கொக்கு மீன் பிடிக்க காத்திருக்கும். அப்போது ஒரு மீன் மற்ற மீன்களிடம் கொக்கு நம்மையெல்லாம் பிடிக்க வருகிறது. ஆனால் நாம் கொக்கிடம் சிக்கவில்லை என்று பேசிக்கொண்ட அப்போது ஒரு கொக்கு அந்த மீன் பேசுவதை கேட்டது. ஒரு கொக்கு எப்படியாவது நாம் அந்த மீனை பிடிக்க வேண்டும் என்று நினைத்தது. அந்த இரவு. கொக்கு தூங்க செல்லும் போது அதையே கொண்டது. அடுத்த நாள் மன்னொரு கொக்கு அக்குளத்தில் மீன் பிடிக்க வந்தது. அம்மீன்கள் நாம் இந்த கொக்கிடமும் சிக்கவில்லை என்று பேசிக்கொண்டன. அந்த கொக்கு பாவம் அந்த மீன்களை நான் சாப்பிட்டு விட்டால் அந்த மீன்கள் எப்படி வாழும் என்று நினைத்தது. அன்று இரவு அந்த கொக்கு அதையே நினைத்தது. இரண்டாவதாக வந்த ~~நான~~ கொக்கு அடுத்த நாள் காலையில் குளத்திற்கு செல்ல தயாராக இருந்தது. அக்கொக்கு குளத்திற்கு சென்றுவிட்டது. அக்கொக்கு மீன்களிடம் நான் உங்களை சாப்பிட மாட்டேன் என்று சொன்னது. முதல் வந்த கொக்கும் யோசித்து வந்து அம்மீன்களிடம் நானும் உங்களை சாப்பிட மாட்டேன் என்று சொன்னது. இதில் இருந்து நாம் கற்று கொள்வது நாமும் ஒருவரை துன்புறுத்த கூடாது. அதுமில்லாமல் மற்றவர்களை வாழ விடணும்.

அ. நித்தில்பிரியா
ஐந்தாம் வகுப்பு



விளம்பரம் எழுதுதல்

ஒப்படைப்பு 4

[illegible]

வாருங்க! வாருங்க!
ஐந்து வயது குழந்தைகளை பள்ளியில் சேர்க்க வாங்க!
சீர் உடை இலவசமாகக் கிடைக்கும்.

★ மாணவர்களின் திறன்களை வெளிப்படுத்த கலைத் திருவிழா நடைபெறும்.

★ இங்கு இலவசமாக காலை உணவுத்திட்டம் இருக்கிறது.

★ இந்தப் பள்ளியில் நூலகப்புத்தகங்கள் படிக்கலாம்.

★ அரசு பள்ளியில் சேர்த்தால் பணம் கட்ட வேண்டாம்.

★ இங்கு திரீன்பலகை பார்த்து அறிவை வளர்க்கலாம்.

★ இங்கு நன்றாக சொல்லித் தருவார்கள்.

★ இங்கு கலைத்திருவிழாவில் பல்வேறு திறமைகளை வெளிப்படுத்தலாம்.

★ இந்தப் பள்ளியில் மகிழ்ச்சியாகப் படிக்கலாம்.

முகவரி: ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி
பொ. மல்லாபுரம்
தருமபுரி மாவட்டம்
பாப்பிரெட்டிப்பட்டி வட்டம்
அஞ்சல் எண் - 635301

சேர்ப்பீர்! சேர்ப்பீர்!
ஐந்து வயது குழந்தைகளை அரசுப்பள்ளியில் சேர்ப்பீர்!